5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

13. 132. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையும், 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும் (1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது), (தமிழ், ஆங்கிலம்)

133. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

134. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. 1962-63 முதல் 1970-71 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழுவின் (1982-83) இருபத்தி நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1986-87) முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS